அ.வ.எண்: 173/2015 நாள்:03.07.2023

பி. வா.சா.1. செல்வம் (எ) சிங்காரவேலு

**1வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) 1ம் பிரதிவாதி இவ்வழக்கில் என்ன எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளால் என்ற விபரம் எனக்கு தொரியுமா என்றால் தெரியும். இவ்வழக்கில் வாதி நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால் வந்துள்ளார். வாதி எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளால் என்ற விவரம் தெரியுமாஎன்றால் தெரியும் எவ்வளவு விஸ்தீரணம் 1 ஏக்கர் 5 சென்ட் ஆகும். சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும் சர்வே எண். 7/2. தாவா புல எண் தொடர்பாக அ.வ.எண்.105/2011 என்ற வழக்கை முதல் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தாக்கல் செய்யவில்லை. மேற்படி அ.வ.எண்.105/2011 என்ற வழக்கு எந்த புல எண்ணிற்கு தாக்கல் செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த புல எண் என்ன என்றால் 133/2 ஆகும்.

2) மேற்படி புல எண்ணில் முழு விஸ்தீரணத்திர்கும் வழக்கு தாக்கல் செய்தாரா அல்லது அதில் பாதி அளவிற்கு தாக்கல் செய்யதார என்றால் பாதி அளவிற்கு சொத்திற்கு தான் வழக்கு போட்டார். மேற்படி அ.வ.எண்.105/2011 என்ற வழக்கு யாருக்கு சாதகமாக வழக்கு தீர்ப்பானது என்றால் நாடிமுத்து என்பவருக்கு சாதகமாக தீர்ப்பாணது .

3) மேற்படி வழக்கில் தஞ்சாவூர் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அ.வ.எண்.105/2011 வழக்கு நடந்த விபரம் வாதிக்கு தெரியுமா என்றால் தெரியும். இவ்வழக்கில் வாதியின் மகன் மேற்படி அ.வ.எண்.105/2011 என்ற வழக்கில் எங்கள்தரப்பு சாட்சியமாக சட்சியம் அளித்தார் என்றால் ஆமாம். அ.வ.எண்.105/2011 ல் 1ம் பிரதிவாதியின் சகோதரிகள் புஸ்பம், மலர்கொடி ஆகியோர் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளித்தாரா என்றால் ஆமாம்.

4) அ.வ.எண்.105/2011 வழக்கில் 28.12.2004 பாக பத்திரம் செல்லாது என்றும் வழக்கு நடத்தினோம் என்றால் சரிதான். அ.வ.எண்.105/2011 சொத்து சித்திராவிற்கு சொந்தம் என்று தான் நான் வழக்கு நடத்தினேன் என்றால் சரிதான்.

1ம் தரப்பு வாதி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி தொடர் குறுக்கு விசாரணைக்கு வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ஒ.ம்./

பெ. சந்திரசேகர், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.